செ.வெ.எண்224 நாள்:03.04.2018

**திருநெல்வேலி மாவட்டத்தில் வேளாண் தொழில் முனைவோருக்கான புதிய திட்டம் - பிரதம மந்திரி கிசான் சம்படா திட்டத்தில் (உணவு பதப்படுத்துதல் துறையின் கீழ் அதிக மானியத்தில் திட்டம் ) பயன்பெற விரும்புவோர் வேளாண் துணை இயக்குநர் (வணிகம்) அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

----

மத்திய அரசின் உணவு பதப்படுத்துதல் துறையின் மூலம் பிரதம மந்திரி கிசான் சம்பாடா திட்டத்தில் வேளாண் தொழில்முனைவோர் மானிய உதவி பெற்று பயனடையலாம். தமிழகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையினால் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய அளவில் மத்திய அரசு ரூ.6000கோடி மானியமாக வழங்கிட நிதி ஒதுக்கீடு செய்து 2016-2020 நிதியாண்டுகளில் இந்திய உணவு பதப்படுத்தும் அமைச்சகம் மூலம் இத்திட்டத்திற்கான மானியம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கான சந்தைகளைஏற்படுத்திடவும், விளைபொருட்களுக்கு உயர்ந்த விலை கிடைத்திடவும். உணவு பதப்படுத்துதல், விளைபொருட்களுக்கான தொடர்விநியோகம் மேலாண்மை, கிராமப்புறங்களில் மதிப்பு கூட்டுதல், உட்கட்டமைப்புகள் ஏற்படுத்துதல், வேளாண் விளைபொருட்கள் மற்றம் உணவுப்பொருட்கள் ஆகியவைகளை நவீன முறையில் பதப்படுத்துதல் தொழில் நுட்பங்கள் மூலம் ஏற்றுமதி செய்து வேளாண்மையில் வருமானத்தை இரட்டிப்பாக்கிடவும் மத்திய அரசு முனைந்துள்ளது.

மெகாஉணவு பூங்காக்கள், ஒருங்கிணைந்த குளிர் சங்கிலி மற்றும் மதிப்புகூட்டுதல், உணவு பாதுகாப்பு, தரம் உறுதிசெய்தல், உணவு பதப்படுத்துதல் மற்றும் சேமித்தல், உணவு பதப்படுத்தும் தொகுப்புகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்களுக்கு சம்படா திட்டத்தில் மானிய உதவி வழங்கப்படுகிறது.

தமிழகத்தில் 2019-2020 நிதியாண்டில் 10 மெகா உணவு பூங்காக்கள் அமைக்கப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் நபார்டு வங்கி கன்சல்டன்சி சர்வீசஸ் மூலம் கங்கைகொண்டான் சிப்காட் பகுதியில் மெகா உணவு பூங்கா அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டு விரிவான திட்ட அறிக்கை அரசுக்கு சமர்ப்பிக்கப்படவுள்ளது. உணவு பூங்கா அமைத்திட 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். அதிகபட்சமாக ஒரு திட்டத்திற்கு ரூ.50 கோடிவரை மானியம் வழங்கப்படும். (திட்டமதிப்பீடு ரூ.100 கோடிக்கு மேல் இருக்கவேண்டும்).

குளிர்சங்கிலி மற்றும் மதிப்புகூட்டுதல் திட்டத்திற்குஅதிகபட்சமாக ரூ.10 கோடியும் உணவு பதப்படுத்தி பாதுகாத்தல் நுட்பம் விரிவுபடுத்துதல் அல்லது ஏற்படுத்துதல், திட்டத்திற்கு ரூ.5 கோடியும் மானியமாக வழங்கப்படும் .

அரசு நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், தனிநபர்கள் வேளாண் தொழில் முனைவோர்கள் இத்திட்டத்தில் பங்குபெற்று நிதியுதவி பெறமுடியும்.

இந்திய அளவில் சம்படா திட்டத்தில் சுமார் ரூ.31400 கோடி முதலீடு ஈர்த்திடவும் இதன் மூலம் ரூ.1,04,125 கோடி மதிப்புள்ள 334 லட்சம் மெ.டன் வேளாண் விளைபொருள்களை கையாளும் வகையிலும். பணிகள் செயல்படுத்தப்படவுள்ளது. இதனால் சுமார் 20 லட்சம் விவசாயிகள் பயனடைவதுடன் 5,30,500 நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் 2019-2020 ஆண்டில் உருவாக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் சம்படா திட்டத்தில் பயனடைய விரும்புவோர் மேலும் கூடுதல் விபரங்களுக்கு வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) திருநெல்வேலி அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறும், www.mofpi.nic.in இணையதளத்தை பார்வையிடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**